**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**கிருஷ்ணராயபுரம்.**

**<u>முன்னிலை</u> : திரு.ஆர்.பாக்கியராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கிருஷ்ணராயபுரம்.**

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19–ம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>இடைக்கால மனு எண். 2/2025</u>**

**<u>in</u>**

**அசல் வழக்கு எண். 3/2025**

மலைக்கொழுந்து வயது 65,
த/பெ. தங்கராஜு,
செக்கணம் கிராமம்,
திருக்காம்புலியூர் கிராம மஜரா,
கிருஷ்ணராயபுரம் வட்டம்,
கரூர் மாவட்டம். .... மனுதாரர்/வாதி

**//எதிர்//**

1. பெரியசாமி, வயது 60,
த/பெ சோழன் முத்திரியன்
2. வைரப்பெருமாள், வயது 58
த/பெ சோழன் முத்திரியன்

**<u>மேற்படி இருவர் வசிப்பிடம்</u>**

செக்கணம் கிராமம்,
திருக்காம்புலியூர் கிராம மஜரா,
கிருஷ்ணராயபுரம் வட்டம்,
கரூர் மாவட்டம். .... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த மனு, மனுதாரர்/வாதியால் உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 ன் கீழ் மனு சொத்தில் மாதிரி வரைபடத்தை தவிர சிவப்பு வண்ணமிட்ட பகுதியில் நடந்து சென்று அனுபவம் செய்து வருவதையும், மஞ்சள் வண்ணமிட்ட பகுதியில் எவ்வித ஆக்கிரமிப்பு செய்யாமல் இருக்க அசல் வழக்கு முடியும் வரை இடையூறு செய்யக் கூடாது என்று இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்குமாறு கோரியுள்ளார்.

மனு தாக்கல் செய்த நாள் – 20.01.2025
மனு மீது வில்லை – ரூ.30.00

இந்த மனு, கடந்த 11.09.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. D.கவின்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.தியாகு அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,,

**தீர்ப்பாணையுரை**

1. இறுதியாக, மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.
2. செலவுத் தொகை இல்லை.

**சொத்து விபரம்**

கரூர் பதிவு மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், கிருஷ்ணயராபுரம் சார்பகம், திருக்காம்புலியூர் கிராம அயன் புஞ்சை சர்வே எண். 387/1C4( முன்னூற்று எண்பத்தி எழு உட்பிரிவு ஒன்று சி நான்கு) ஹெக்டேர் 0.52.5–க்கு ஏக்கர் 1.30ல் பெரியக்காள் நிலத்திற்கும் கிழக்கு, ரெத்தினகிரி நிலத்திற்கும் தெற்கு, மலையாண்டி நிலத்திற்கும் மேற்கு, எங்கள் இதர நிலத்திற்கும் வடக்கு இதில் ஏக்கர் 1.00 ஒரு ஏக்கர் நிலமும் இதைச் சேர்ந்த சுற்றுக்கால் பொழி தருசு மாமூல் தடநடைபாதை பாத்தியம் அதாவது மேற்படி நிலத்தின் மேல்புறம் ஓரத்தில் எங்கள் இதர நிலத்தின் வழியாக மேற்படி நிலத்திற்கும் தாங்கள் நடந்து கொள்ளும் பாத்தியம் உட்பட கிரையம்.

2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19 ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையிட்டு வழங்கப்பட்டது.

**ஓம்/–திரு.ஆர்.பாக்கியராஜ்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கிருஷ்ணராயபுரம்.**